www.tamilarangam.net

# தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

# PEOPLE'S LIBERATION ORGANIZATION OF THAMILEELAM

## புலிப்படைத் தளபதி....

## சுந்தரம் படுகொலை துரோகத்தின் முத்திரையா ???

"துரோகத்தின் பரிசு" என்ற தலைப்பில் சிவசண்முகமூர்த்தியின் (சந்திரத்தின்) படுகொலையை நயன்மைப்படுத்தித் தமிழீழ விடுதலைப்புலிகள், இயக்கத்தில் இருந்து பிரிந்துசென்ற "டிராஸ்கி" சார்புப் பிற்போக்குவாதிகள் புலிகளின் மத்திய குழு என்ற பெயரில் துண்டறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றனர். கடந்த இரண்டு ஆண்டுகளுக்குமேலாக எதுவித இயக்க நடவடிக்கைகளிலும் ஈடுபடாமலும் மக்கள் மத்தியில் செல்லாமலும் ஒதுங்கிவாழ்ந்த இக்குழு தனது பெரும் சாதனையாகச் சுந்தரத்தைச் சுட்டுதள்ளிவிட்டு அதை நயன்மைப்படுத்தித் தும் நோக்குடனும், தாங்களும் தேசிய இன விடுதலைக்காக ஏதோ செய்வதாகவும் வெளிப்படுத்தும் நோக்குடன் ஓர் துண்டறிக்கையை வெளியிட்டனர். இப்பிற்போக்குக் குழுவுக்குத் தலைமை தாங்குவதாகச் சொல்லிக்கொள்பவர்தான் வே. பிரபாகரன். இவர் தமிழர் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்தும் பிரிந்து சென்று திருவாளர் தங்கத்துரை, குட்டிமணி ஆகியோரின் பெயர் வெளியிடப்படாத இயக்கத்துடன் தன்னை இணைத்துக் கொண்டவர். இனையும்பொழுது "தமிழீழ் விடுதலைப்புலிகள்" என்ற பெயரை த்தான் என்றைக்கும் பயன்படுத்தப் போவதில்லை. இனி அவ்வியக்கத்துக்கும், தனக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்ற உறுதிப்பாட்டைக் கொடுத்தே இவர்களுடன் இணைந்து கொண்டவர். மக்களில் நம்பிக்கை அற்றவர், த. வி. புலிகள் தனக்கென ஓர் மக்களமைப்பைக் கட்டுவதையும் வேலைகள் பரவலாக்கப் படுவதையும், அதன் மூலம் மக்கள் போராட்டத்தை முன் எடுக்க வேண்டும் என்ற இயக்கத்தின் சிந்தனைத்தெளிவை ஏற்றுக்கொள்ளாது தான் ஒரு பயங்கரவாதக்குழுவாகவே இருக்க விரும்புவதாகக் கூறிக்கொண்டு இயக்கத்தில் இருந்தும் வெளியேறியவர்தான் இந்த வேலுப்பிள்ளை பிரபாகரன்.

யாழ்ப்பாணம் சித்திரா அச்சகத்தில் (2-1-82) கொலை செய்யப்பட்ட சதாசிவம்சிவசண்முகமூர்த்தியின் கொலையையும் இன்னும் பல கொலைகளையும் தாம் செய்ததாக அத்துண்டறிக்கையில் குறிப்பிட்டு உள்ளார்கள். கொலை செய்யப்பட்ட ஏனையோர் யார்? அவர்கள் ஏன் கொலை செய்யப்பட்டார்கள்? என்பது அத்துண்டறிக்கையில் குறிப்பிடப்பெறவில்லை. அவர்கள் யார் யார் என்பது தற்பொழுது மக்களுக்கு சரிவரத் தெரியாமலேயே, இருக்கின்றது எனிலும் நாம் வெளியிட்ட 'புலிப்படைத் தளபதி சுந்தரம் மரணம்' என்ற துண்டறிக்கையில் பிரபாகரன் குழுவால் கொலை செய்யப்பட்ட இருவரின் பெயர்களை மட்டும் வெளியிட்டிருந்தோம். இக்கொலைகளுக்கு எமது கழகத் தோழர்கள் என்றும் உடந்தையாக இருந்தது கிடையாது. மாறாக அந்நடவடிக்கையை இயக்கத்துக்குள் எதிர்த்து வந்துள்ளனர். இவர்களை ஏன் இத்தனிமனித பயங்கரவாத பிரபாகரன் குழு கொலை செய்தது என்பது பற்றிய முழு ஆய்வு கழகத்தின் திறனாய்வாக வெகு விரைவில் வெளிவரும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களை எது பயிர் எது என்று தெரியாதவர்கள் மிகக் கொடூரமானவர்கள். மக்களின் விடுதலைப் போராளிகளைத்தான் இவர்களினால் கொலை செய்ய முடியும். இதனால் தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பின்தள்ளுவது மட்டுமன்றிப் பிற்போக்குவாத சிங்கள மேலாண்மை அரசுக்கு உதவியாகவும் ஈடுபட்டு வருகின்றனர்.

## யார் இந்தச் சுந்தரம்?

மக்களிலும், மக்கள் போராட்டத்திலும், தமிழீழ் விடுதலையிலும் நம்பிக்கையுடையவர். மக்களை வென்றெடுப்பதற்காக நீண்டகாலம் உழைத்தவர். ஏதிலிகளாக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வுக்காக உழைத்தவர். சிறிலங்காவின் இனவாத ஆட்சியினரின் அடக்குமுறையால் பாதிக்கப்பட்டு உணவின்றி உடையின்றி, இருக்க இடமின்றி, வாழவழியற்று வேதனைப்பட்ட பல்லாயிரம் மக்களை அரசின் எதிர்ப்பின் இடையிலும் தமிழீழத்தின் எல்லைப்பகுதியில் காப்புடன் குடியமர்த்தி வெற்றிகண்ட பெருமைக்குரியவர்.

இரண்டாண்டுகளாகத் த. வி. புலிகள் இயக்கத்தில் ''புதியபாதையை''க் கண்டுபிடித்து அரசியற் போராட்டதை முன்னெடுத்தவர். தனிமனித பயங்கரவாதத்தை புறக்கணித்தவர். கொரில்லா முறைப்போரை அறிமுகப்படுத்தியவர். செயலில்காட்டியவர். சுந்தரத்தை பெரும்பாலான மக்கள் நேரடியாக அறிந்திருந்தார்கள். புதியபாதைச் செய்தியித்ழ் மூலம் சமூகவுடமைச்சிந்தனையாளர் நடுவில் உயர் எண்ணத்தைப் பெற்றவர். 6000 படிகளுக்குமேல் விற்பனை செய்ததின் மூலம் படிப்போரின் உள்ளங்களைக் கவர்ந்தவர்.

இவர் மேடை முழக்கங்களில் விடுதலைகண்ட தமிழர் (விடுதலைக்) கூட்டணியின் பிற்போக்குத் தனத்தைக் கண்டித்தவர். இத்தலைவர்களின் தன்னலப்போக்கை வெளிபடுத்தியவர். பேச்சுவார்த்தைகளினாலும், புள்ளடிப்போராட்டங்களினாலும் விடுதலையை வென்றெடுக்கலாம் என்ற நம்பிக்கையாளர்களின் கபட எண்ணத்தை உடைத்தெறிந்தவர். இதன்மூலம் த. வி. கூட்டணியின் பிற்போக்குத் தலைமைக்குப்பெரும் தலையிடியைக் கொடுத்தவர். வணிகத்தில் ஏற்பட்ட பிணக்கினால், அரசியல் சாயம்பூசப்பட்டு நடாத்திய கொலைகளைக் கண்டித்தவர். பிற்போக்கு வாதிகளை எதுவித இழப்புமின்றி நாடாளுமன்றம் அனுப்புவதற்குத் துணையாக நடாத்திய தனிமனித பயங்கரவாதத்தைக் கண்டித்தவர் இப்படியான முற்போக்கு வெளிப்பாடுகளைத் தடுப்பதற்காக த. வி. கூட்டணியின் செயலதிபரினாலும், நா. ம. உறுப்பினர் சிலரினாலும் ''புதியபாதை'' செய்தியிதழை நிறுத்துவதற்குத் தூதுவர்கள் அனுப்பப்பட்டனர். அத்தூதுவர்களுக்கு நிலைமையை விளக்கி, அவர்களை வெற்றிகண்டு இயக்கத்தின்பால் ஈர்த்தவர். கடந்த ஆண்டு வவுனியாவில் அரசு படைத்துறையினரின் கொடூரமான தாக்குதல் தீ வைப்புக்களைக் கண்டித்து நடாத்திய உண்ணாநோன்பில் ''புதியபதை'' இதழ் விற்பனை செய்யக் கூடாது எனத் த. வி. கூட்டணியின் வவுனியா நா.ம, உறுப்பினர் போர்க்குரல் எழுப்பினார். ஆனால் மக்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால் எதிர்பார்த்ததை விட இதழ் கூடுதலாக விற்பனையானது, கருத்துப் பரவலைத்தடுக்க முற்பட்ட நா. ம. உறுப்பினர் தனது சிந்தனையற்ற செயலினால் கருத்து மிகத்தீவிரமாகப் பரவியதைப் பார்த்து தலைகுனிய வைத்தவர் ஆசிரியர் சுந்தரம்.

கொள்கைகளை விட்டுக்கொடுக்க செய்தி வெளியிட்டுக் கூறு மறுத்தது. பொறுப்பாசிரியர் சுந்தரம் இதற்குத் தலைமை தாங்கினார், துணிந்து நின்றார். தொடர்ந்தார் பணியை. ஆனால் சித்திரா அச்சகத்திலே வைத்து தளபதி படுகொலை செய்யப்பட்டதுடன் கூட்டணித் தலைமைப்பீடம் எண்ணியது நிறைவேறியது.

www.tamilarangam.net



## புதியபாதை செய்தியிதழ் தடை :

அடிமைப்பட்டுச் சீரழிந்து போயிருக்கும், மக்களை எழுச்சி கொள்ளவைப்பதும், கருத்து அடிப்படையில் தெளிவாக்கி மக்களைப் போராடவைப்பதும், வரலாறு புறக்கணித்த பாதையை எடுத்துக் காட்டி வரலாற்றுப் போக்கை நடைமுறைப்படுத்துவதும், சந்தர்ப்பவாத தலைமைகளை எடுத்துகாட்டி மக்களைச் சரியான தலைமையில் அணிதிரட்டுவதும் ஒரு கொள்கையை முன்னெடுக்கும் முற்போக்கு இதழின் பணியாகும். அப்பணியை ''புதியபாதை'' தொடர்ந்தது. புதியபாதையிலே வந்த கட்டுரைகள் கருத்துப்படங்கள் பலரால் பாராட்டுதலைப் பெற்றது. வெளிநாடுகளிலும் இதற்கு நிரம்ப அன்பர்கள் உண்டு. புதியபாதையின் அரசியல் நிலைப்பாடும் மார்க்கிச சிந்தனையூடாக அதன் தமிழீழ விடுதலையின் முன்னெடுப்பும், தீவிரமும் திங்கள் தோறும் வெளிவந்த 14 படிகளிலும் காணலாம், இப்புதிய பாதையில்வந்த கருத்துக்களை மிதவாதிகளுக்கு,தமிழீழ விடுதலைக்கூட்டணியின் பிற்போக்கு தலைமைப்பீடத்திற்கும் இன்னும் மக்களில் நம்பிக்கையற்றுவெறும் கருவிகளிலும் தனி மனித பயங்கரவாதத்திலும், நம்பிக்கைவைத்துள்ள பயங்கரவாத புலி எனப்படும் பிரபாகரன் குழுவிற்கும் இது வெறுப்பைக் கொடுத்தது. இவ்வெறுப்பினுல் ஏற்பட்ட விளைவுதான் மக்களைத்தெளிவாக்கி விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்து சென்றவனுக்கு கிடைத்தபரிசு. அவன் சிந்தனைகளைத் தாங்கிவந்த புதியபாதை செய்தியிதழும் கொலை வெறியர்களால் அழிக்க முயற்சிக்கப்பட்டது. புதியபாதைக்கு நேர்ந்தது துரோகத்தின் பரிசா? மக்களே சிந்திப்பீர் ! செயற்படுவீர்!

மக்களிடையே இக்கருத்துக்கள் வளர்வதையும் இக்கருத்துக்களின் அடிப்படையில் மக்கள் எழுச்சிபெற்று அணிதிரள்வதையும் தடுப்பதற்கு முதலாளித்துவ அரசு முயற்ச்சி எடுத்து, செய்தித் தடைச் சட்டத்தை நடைமுறைப்படுத்திஞர்கள். நெருக்கடி நிலைச்சட்டங்களைப் பயன்படுத்தி வெளியீட்டாளர்களையும், விற்பனையாளர்களையும் கைது செய்து உசாவலுக்கும், உடற் சிதைவுக்கும் உட்படுத்திஞர்கள்.

''புதியபாதையில்'' வெளிவந்த கருத்துக்களின் அடிப்படையில் மக்கள் எழுச்சிகொள்வதை த. வி. கூட்டணியின் பிற்போக்குவாதத் தலைமைப்பீடம் வெறுத்தது. அவர்களுக்குத் தேவைப்பட்டதெல்லாம் தேர்தல்கால எழுச்சிகளே. அவர்களுடைய சந்தர்ப்பவாதப் போக்கை அம்பலப்படுத்திய போது எரிச்சலுற்ருர்கள். எதிராக 'உதயசூரியன்' இதழை முடுக்கிவிட்டார்கள். மேடைகளிலே அட்டிப்பார்த்தார்கள். அரசு நசுக்கலுக்குத் தனிமைப்படுத்திஞர்கள். தனிமனித பயங்கரவாதிகளுக்குத் புதியபாதையின் கருத்து எதிராகப்பட்டது. புதியபாதை தன்னலத் தலைவர்களையும் கற்பனை வீரர்களையும் உருவாக்குவதை முறியடித்து மக்களுக்குத் தங்களுடைய ஆற்றலை உணரத் தூண்டிற்று. உலக நாடுகளின் மக்கள் போராட்டங்களை எடுத்துக்காட்டிற்று. இதன் வளர்ச்சியிலே காழ்ப்புக்கொண்டோர் ஆசிரியரைப் படுகொலை செய்தனர். அச்சகத்திலே வைத்து செய்ததனல் இதழையும் இனவாத அரசு தடைசெய்ய உதவிஞர்கள். இதனல் துரோகத்தின் பாதையிலே சென்றவர்கள் யார்? போராளிகள் யார் ? ஆய்வுசெய்வீர்.

## அச்சக வேலைக்கு இடையூறு :

சுந்தரத்தை அச்சகத்திலே வைத்துக் கொலைசெய்தது ஒரு திட்டமிட்ட சூழ்ச்சியே. விடுதலை இயக்கம் எனச்சொல்லிக்கொள்பவர் எவரும் இவ்வேலையை செய்யமாட்டார்கள். தனியார் அச்சகத்திலே இக்கொலையை நடத்தியதன் மூலம் தனியார் அச்சகங்களை அரசியல் வெளியீடுகளுக்கு பயன்படுத்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வதைத் தடுத்துள்ளார்கள். அச்சகங்களைக் காட்டிக் கொடுத்திருக்கிறார்கள். இதனால் விடுதலைக்கான வெளியீடுகள் மக்களுடைய உணர்வுகளை வளர்த்தெடுக்கக்கூடிய கருத்துக்கள் அடங்கிய வெளியீடுகள் அரசியல் செய்தியிதழ்கள் ஆகியன அச்சுப்பதிவு செய்யவியலாது தடைப்பட்டுள்ளது. எமது அரசியற் பணியைத் தொடரவியலாத நிலைக்கு நாம் ஆளாக்கப்பட்டுள்ளோம். நமக்கு மட்டுமன்றி நம் போன்ற அரசியல் நோக்குள்ள நட்பு இயக்கங்களுக்கும் ஆப்பு வைக்கப்பட்டுள்ளது. உரிமைக் கருத்துக்களை மக்களிடையே வளர்ப்பதற்கும் அடக்குமுறைக்கு எதிராக மக்களைப் எழுச்சிகொள்ள வைப்பதற்கும், சரியான பாதையிலே கருத்துத்தெளிவோடு மக்களைப் போராட்டத்திற்கு அழைத்துச் செல்வதற்கும் அச்சகம் பெரும்துணையாகும். உலகின் விடுதலைஅடைந்த நாடுகளின் வரலாற்றில் விடுதலையியக்கங்கள் தமதுவேலைகளைச் செய்வதற்கு மறைமுகமான நிலவறைகளிலே அச்சுப்பொறியை வைத்து விடுதலை தொடர்பான அறிக்கைகளையும் வெளியீடுகளையும் நடாத்தியிருக்கிறார்கள். இவற்றை உணர்ந்துதான் நம்மை அடக்கி ஒடுக்க எண்ணும் சிங்கள அரசு அச்சகங்களுக்குத் தடைவைத்தார்கள். விடுதலை அறிக்கைகளையும் செய்தித்தாளில் வெளிவர தடைசெய்கிறார்கள். தடையை மீறி அச்சிட்ட அச்சகங்களைப் பறிமுதல் செய்கிறார்கள். இதே வேலையைத்தான் தனிமனித பயங்கரவாதக் குழு சுந்தரதைத் அச்சகத்திலே வைத்துப் படுகொலை செய்ததன் மூலம் நிறைவேற்றி இருக்கிறது அரசியல் வறட்சியினால் ஏற்பட்ட அழிவு வேலைகள்தான் இவை.

தமிழ் மக்களுடைய அனைத்துச்சிக்கல்களையும் தீர்ப்பதற்கு அரசியல் விடுதலை இன்றியமையாததாகும். அதுதான் சமூகவுடமைக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட நாட்டுவிடுதலையாகும்? இவற்றைஎல்லாம் ஆய்ந்துபார்த்து வினையாற்றத்தெரியாதவர்கள் மக்களுக்கு வழிகாட்டுவார்களா ? யார் இவர்கள்? எதற்காகப் போராடுகிறார்கள்? எதற்காக இவர்களுக்குக் கட்டுபாடு? எதைச்சாதிக்க இவர்களுக்குக் கட்டுப்பாடு? எதைச்சாதிக்க இவர்களுக்கு ஒரு இயக்கம்? இவற்றை எல்லாம் தமிழ் மக்கள் ஆய்ந்துதெளிதல் வேண்டும்.

## சுந்தரம்

கொள்ளையடிப்பதைக் குறிக்கோளாகவும் அதைப்பற்றிஉசாவல் மேற்கொள்ளும் புலனாய்வுத்துறையினரைக் கொலைசெய்வதைத் தொழிலாகவும் கொண்டிருந்த வரலாற்றைத் திசைதிருப்பி புதியபாதையிலே அதற்குப்புதுவடிவம் கொடுத்தவன். அரசியல் நடவடிக்கைக்களுக்காகப் போராடுவதையும் அதற்காகக் கருவிகளைக் கையிலேந்துவதையும் தனதுதெளிவான கருத்துக்களால் எடுத்துக் காட்டி செயலிலும் செய்துகாட்டி வரலாற்றில் புதிய அத்தியாயத்தைத் தொடக்கி வைத்தவன். அடிக்கடி நடாத்திய கொள்ளைகளினாலும் வைப்பகங்களை மூடவைத்த பயங்கரவாதிகளை விட மக்களை ஒடுக்கிய காவல்படையினர், தங்கள் நிலையங்களை மூடி பாதுகாப்பிற்காகப் பின்வாங்கிய நிலையை வரலாற்றிலே தோற்றுவித்தவன். அதுமட்டு மன்றி ஆனைக்கோட்டைக் காவல் நிலையத்தை கழகப் படையினர் தகர்த்ததனால், எண்பதுக்கு மேற்பட்ட காவலர்கள் தமது நிலையங்களை விட்டு அலறி அடித்துக் கொண்டு தொடர்வண்டியிலே கொழும்பை நோக்கி ஓட்டமெடுக்க வைத்தவன். மக்கள் இடையே காவல்துறையை எதிர்த்துப் போராடலாம் என்ற நம்பிக்கையை எழுத்திலும் செயலிலும் நிறுவியவன். கருவிகளை விலைக்கு வாங்கவேண்டியதில்லை எதிரிகளே எமக்கு வழங்குவார்கள் என்ற மாவோவின் தத்துவத்தைத் தமிழீழத்தில் செயற்படுத்தியவன். காவலர்களோடு மட்டுமன்றி படைத்துறையினரோடும் மோதலாம் என்பதை கிளிநொச்சியிலே கழகவீரர்களுடன் பட்டாளத்தினரை எதிர்த்து நேரடிமோதலில் ஈடுபட்டு, இரண்டு அரச சிப்பாய்களைச் சுட்டு வீழ்த்தியதோடு பத்துச்

www.tamilarangam.net



சிப்பாய்களை யாழ்கண்டி நெடுஞ்சாலையிலே புறமுதுகிட வைத்தவன். ஓடிய சிப்பாய்களிடம் படைத்துறை அதிகாரி விளக்கம் கேட்டு ஒழுங்கு நடவடிக்கை எடுத்த செய்தி நாளேடுகளில் வெளிவந்து இருந்தது மக்கள் அறிந்தே. இதற்கெல்லாம் தலைமைதாங்கியதால் தளபதியானவன்தான் சுந்தரம். மாருகத் காலிமுகத்திடலில் சட்டமறுப்புப் போராட்டத்தை விடுதலைத்தலைவர் வன்னியசிங்கம் தந்தை செல்வா, இரும்புமனிதன் நாகநாதன் ஆகியோர் தலைமைதாங்கி நடத்தியபொழுது, அதில் கலந்து கொண்டுவிட்டு, திரு. சுந்தரலிங்கம் அவர்களின் மலையுந்தில் திரும்ப சென்றுகொண்டிருக்கும் பொழுது சிங்களக் காடையர்களால் தமிழ் மக்களின் மீது வீசப்பட்டகல் ஒன்று எதிர்பாராதவிதமாக மலையுந்தில் மறைந்து சென்றவர்க்கு மண்டையில் அரையும் குறையுமாகப் பிடிக்க அதனின்று கசிந்த அரத்தக் காயத்திற்கு கட்டுப்போட்டுத் தளபதியானவர் அல்ல புதியபாதை ஆசிரியர் சுந்தரம். எறியப்பட்ட கல் குறிபார்த்து எறியபட்டதல்ல, கூட்டத்தில் எறியப்பட்டதே, சுட்டசூடும் சுடப்பட்ட சூடும் குறிபார்த்து சுடப்பட்டதே. இவற்றையெல்லாம் த.வி. கூட்டணியின் தலைமைப்பீடம் அறியாததல்ல். சுந்தரத்தின் வலுவை உனர்ந்தார் தளர்பதியார். ஏற்கனவே சுந்தரம் சார்ந்த இயக்கத்தின் மேல் நச்சு எண்ணம் கொண்ட பிரபாகரனுக்கு கூட்டணியின் பிற்போக்குத் தலைமைப்பீடம் ஆசைவார்த்தை கூறியது. சுந்தரத்தினதும் அவர்சார்ந்த கழகத்தினது செயலையும் வளர்ச்சியையும் பார்த்துத் திகைப்படைந்தது அரசு திகிலடைந்தது த வி. கூட்டணியின் பிற்போக்குத் தலைமைப்பீடம், மனம் புழுங்கினர் தனிமனித பயங்கரவாதக் குழுவும் அதன் தலைவர் பிரபாகரனும். இம் மும்முனைச் சூழ்ச்சியின் முடிவில் மக்கள் தலைவன் சுட்டுவீழ்த்தப்பட்டான், சிந்தனைத் தெளிவற்றவர்கள், தன்னறிவற்றவர்கள், பட்டறிவற்றவர்கள், தொலைநோக்கற்றவர்கள் இப்படித்தான் வரலாற்றில் தனிமனித பயங்கரவாதக் குழுவின் தலைமைப்பொறுப்பேற்பார்கள்.

## ''தமிழன்குரல்'' செய்தியிதழ் தடை

தமிழன்குரல் என்ற செய்தியிதழ் சின்னட்டி பாலசிங்கம் என்ற தனியார் ஒருவரால் அச்சிட்டு வெளிவரப்பெற்றது அவரே அதன் ஆசிரியராகவும் இருந்தார். இச் செய்தித்தாள் ஒடுக்குமுறைக்கு எதிராக இனவாத அரசைக்கண்டித்து கருத்துக்களை வெளியிட்டுவந்தது. தமிழர் நடுவிலே இன்று இருக்கின்ற சந்தர்ப்பவாத நாடாளுமன்றத் தலைமையை அம்பலப்படுத்தியது. அதில் த. வி. கூட்டணியின் பிற்போக்குவாதத் தலைமையின் போக்கைபற்றிய கருத்துப்படங்கள், அரசியல் கருத்துப்படங்கள் வெளிவரப்பெற்றன இவ்விதம் சித்திரா அச்சகத்தில் அச்சிடப்பெற்றது செய்தித்துறையினால் சுந்தரம் பாலசிங்கத்தோடு அறிமுகமானார். இதன் விளைவாகவே, புதியபாதையையும் அச்சிடுவதற்கு அச்சக உரிமையாளருக்கு அறிமுகம் செய்துவைத்தார் பாலசிங்கம். சுந்தரம் அச்சகத்திலே வைத்துக்கொலை செய்யப்பட்டதன் மூலம் உசாவலுக்காக பாலசிங்கம் கைது செய்யப்பட்டு உடற்சிதைவுக்கும் உள்ளாக்கப்பட்டார். அவர் அச்சிட்டு வெளியிட்ட தமிழன்குரல் இதழும் நிறுத்தப்பட்டது. தமிழன் குரல் செய்தியிதழ் இடைநிறுத்தத்தினால் த. வி. கூட்டணியின் பிற்போக்குத் தலைமைப்பீடம் ஆறுதல் அடைந்தது. அரசை மிக வலுவாகத் தாக்கி எழுதியதால் இவ்விடத்து இனவாத அரசும் இன்பமடைந்தது எழுச்சிகொள்ள வைத்த செய்தியிதழ இடைநிறுத்தியததால் அடக்கிவைக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு பெரும் இழப்பு ஏற்ப்பட்டது. விடுதலைப் மோராட்டம் பின்தள்ளப்பெற்றது. எதிரிகள் வலுவடைந்தனர். சுந்தரத்தினுடைய படுகொலை அச்சதத்திலே வைத்துச் செய்ததனால் ஏற்பட்ட தாக்கத்தின் எதிர்விளைவே, பாலசிங்கத்தின் மேலான அரசுத் தாக்கலாகும், இப்படியான விளைவுகளை ஆய்ந்து செயலாற்றுதவர்கள் விடுதலையியக்கம் எனத்தம்மை அழைத்துக் கொள்வதில் என்னபயன்? இவற்றை ஆய்வு செய்யத் தகுதியற்ற பயங்கரவாதிகளின் மத்தியக்குழு பெயருக்கு இருந்துஎன்ன

www.tamilarangam.net


பயன்? இவர்களுக்குப் படைத்துறைக் கட்டுப்பாடும் ஒருகேடா? இவர்களுக்கு மக்கள் ஏன்பாதுகாப்புக் கொடுக்கவேண்டும். யார் எதிரிகள் என்பதை இளைஞர்கள் ஆய்வு செய்ய வேண்டும்.

## பொதுஉடமை வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை

சுந்தரம் தமிழரசுக் கட்சியினுடைய போராட்ட நடவடிக்கைகளினால் உணர்வூட்டப் பெற்றவன். இவர்களுடைய குடும்பமே தொடக்ககாலத்தில் இருந்து தமிழரசு கட்சியில் ஈடுபாடுடையதாக இருந்தது வாழ்வும் சூழலும் வரலாற்று ஓட்டத்தின் வளர்ச்சியும் சுந்தரத்தைப் பொது உடைமைச் சிந்தனையில் வளர்ச்சியடையச் செய்தது. அவனுக்கு ஏற்பட்ட சிந்தனை வளர்ச்சியை அரசியல் நோக்கற்றவர்களும், வரலாற்றைத் தெரியாதவர்களும் தனிமனித பயங்கரவாத நடவடிக்கையில் மட்டும் நம்பிக்கை வைத்தவர்களும் எதிர்த்தனர். ஆனால் சுந்தரம் இயக்கத்திற்குள் சிந்தனைவளர்ச்சியை ஏற்படுத்தும் கணிசமான பிரிவினரை புதியபாதையிலே கொண்டுவந்தான். புதியபாதை செய்தியிதழைப் படிப்போர் இவருடைய சிந்தனை வளர்ச்சியை ஆய்ந்து ஒப்புக்கொண்டு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்தனர். சுந்தரம் படித்தவர். இந்தியாவில் கல்வி பெற்றவர், போராட்டத்தின் மூலமே பொது உடமைத் தத்துவத்தைப் பயின்றவர்.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக" எனும் குறள்படி வாழ்ந்தவர்.

மாவோவின் தத்துவங்களையும், அவர்தம் தோழர்களுக்கு எழுதிய முற்போக்கு மடல்களையும் புதியபாதையிலே வெளியிட்டார். இம்மடல்கள் கூட்டணியின் பிற்போக்குவாதத் தலைமைப்பீடத்திற்கு ஒரு சவாலாக அமைந்தது. புதியபாதைமக்கள் மன்றத்திலே ஒருகருத்து வளர்ச்சியை ஏற்படுத்தியது தலைவர்கள் யார்? தன்னலவாதிகள் யார்? விடுதலைத்தலைவர்கள் யார்? சந்தர்ப்பவாதத் தலைவர்கள்யார் என்பதை உணரவைத்த இவ்வளர்ச்சிப்போக்கற்கு முன்னணியிலே உழைத்த சுந்தரம் படுகொலை செய்யப்பட்டதனால், சிந்தனை வளர்சிக்கு முட்டுகட்டை போடப்பெற்றது. இதன்மூலம் ஒவ்வொரு தனிமனித சிந்தனை வளர்ச்சிக்கும் அச்சுறுத்தல் விடப்பட்டது. முற்போக்குவாத சமூகவுடைமைக் குழுக்களை இயங்கியல் அடிப்படையில் இணைக்கவிரும்பினார் சுந்தரம்.

இதன் முதற்கட்ட வேலையாக செயற்பாடுகளையும் செயற்திட்டங்களையும் தோழர்கட்கு விளக்கினார். இதனால் சிலகுழுக்கள் இயக்கத்துடன் இணைந்தன. பலர் கழகத்துக்குப் பக்கத்துணையாகச் செயற்பட்டனர். சுந்தரத்தைக் கொலை செய்ததன் மூலம் தனிமனித பயங்கரவாதிகள் எதைச்சாதித்தார்கள்? எந்த வாக்கத்தின் ஆவல்களை நிறைவேற்றினார்கள்? உழவர்களைச் சந்திக்கத் தயங்கியவர்கள். பாட்டாளிகளைப் பார்க்கவே பதுங்கியவர்கள், இன நசுக்களினால் பாதிக்கப்பட்ட எதிலிகளுக்கு மறுவாழ்வு கொடுகக மறுத்தவர்கள் எந்த வர்க்கத்தைச் சேர்ந்வர்களாக இருப்பார்கள்? சமூக உடமையாளர்களே சிந்திப்பீர்! எதிரியை இனம்கண்டு செயற்படுவீர்! மக்களைத் தனிமனித பயங்கர வாதக் குழுவினின்று பாதுகாப்பீர்! எழுச்சியடைந்த இளைஞர்களே தனிமனித பயங்கரவாதத்தில் சிக்காமலும் தனிமனித பயங்கரவாதிகளுக்கு இரையாகாமலும் காத்துக்கொள்வீர்.

"அறத்துக்கே அன்பு சார்பென்ப அறியார்
மறத்துக்கும் அஃதே துணை"

என்பதனை அறியாது கொலைத் தொழிலே விடுதலையின் முகாமையான நோக்கு என எண்ணம் கொண்ட இப் பிற்போக்கு வாதிகளுடனான தொடர்புகளை அறுத்தெறியுங்கள். வெறும் தத்துவப் பூச்சிகளாக இருந்துவிடாது எதிரிகளை அறிந்துபோராடும் கழகத்தில் இணைந்து கொள்வீர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## எழுச்சியை முறியடித்தனர் காகிதப் புலிகள்.

1982ஆம் ஆண்டு தைப் பொங்கலன்று தமிழீழம் அமுலாக்கம் செய்யவிருப்பதாக இலண்டனிலே தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் கிருட்டிணா வைகுந்தவாசன் அறிவித்திருந்தார். இச் செயற்பாட்டினை ஓர் ஆண்டுக்கு முன்னரேவைகுந்தவாசன் அறிவித்திருந்தார். தொடக்கத்தில் த. வி. கூட்டணியினர் இதை எதிர்க்கவில்லை தமிழீழம் அமுலாக்கலை மேற்கொண்டு, வெளி நாட்டில் ஓர் தமிழீழ அரசினைப் செயற்படுத்தும் நோக்கத்துடனேயே திரு. வைகுந்தவாசன் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக கூட்டணியின் செயலதிபரினால் அமர்த்தப்பெற்றார். 1981இன் முற்பகுதியில் சிங்கள முதலாளித்துவ அரசைக் காப்பாற்றும் நோக்குடன், மாவட்ட வளர்ச்சி (அபிவிருத்தி) அவை தரப் படுகின்றன என்ற சாக்கில் சிங்கள முதலாளித்துவ அரசுக்கு கூட்டணியினர் நிபந்தனையற்ற ஆதரவு கொடுத்தார்கள். அதுமட்டுமன்றி தேசிய விடுதலைப் போராட்டத்தை அடுத்ததேர்தல் வரும்வரை கைவிடுவதாகவும், விடுதலையை முன்னெடுத்துச் செல்பவர்களுக்கு எதிராகச் செயற்படுவதாகவும் ஒப்புதல் கொடுத்தார்கள். முதலாளித்துவ சிங்கள அரசைக் காப்பாற்றுவதற்கு இவர்களுக்கு இரண்டு மூகாமையான காரணியங்கள் இருந்தன 1. தங்கள் நலத்தையும், சொத்துக்களையும் முடிந்தால் உயிரையும் காப்பாற்றிக் கொள்வது. 2. சுரண்டும் வர்க்கத்தின் ஆட்சியை நிலைத்துநிற்கவைத்தல். ஏனெனில் அவர்களும் சுரண்டும் வர்க்கத்தின் பங்காளிகளே இன்றைய எதிர்கட்சித்தலைவர் அன்று தமிழரசுக் கட்சியிலும் பின் த. வி. கூட்டணியிலும் ஆளுமை செய்யத்தொடங்கிய காலந்தொட்டு சுரண்டும் வர்க்க ஆட்சியாளரான ஐக்கிய தேசியக் கட்சி (U. N. P.) யினுடன் பேச்சுவார்த்தை நடத்தியதிலும் கூட்டுச் சேர்ந்ததிலிருந்தும் மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும். 1965-இல் ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஐந்து ஆண்டுகள் கூட்டுச் சேர்ந்ததும் பின் 1977-முதல் இன்றுவரை ஜே. ஆர். செயவர்த்தனாவுடன் (ஐ.தே.க) ஆட்சியை ஆதரித்து படிப்படியாக இரண்டறக் கலந்ததையும் மக்கள் நினைவு கூரவேண்டும். இந்நிலையில் 1982 மார்கழியிலே வைகுந்தவாசன் மீண்டும் தமிழீழப் பிரகடனத்தைப் பற்றி நினைவு கூர்ந்தபோது த.வி. கூட்டணியின் பிற்போக்குத் தலைமைப் பீடம்மிகத் தீவிரமாக எதிர்த்தது.

ஜே. ஆர். செயவர்த்தனாவும் அவரது அரசும் இத் தீர்மானத்துக்கு எதிராக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். வெளிநாட்டு அமைச்சரை அனுப்பி வெளிநாடுகளில் அரசினுடைய நிலையையும் கூட்டணியின் நிலையையும் தெளிவுபடுத்தினார்கள் வெளிநாட்டிலிருக்கும் இலங்கைத் தூதரகங்களுக்குப் பாதுகாப்பு வலுப்படுத்தப் பெற்றது. உள்நாட்டிலும் த.வி. கூட்டணியினரை அரசு பேச்சுவார்த்தைக்கு அழைத்தது. அவர்களைக் கொண்டே தமிழீழ அமுலுக்கு எதிராக அறிக்கை விடப்பணித்தனர். தமிழீழ விடுதலை பற்றிப் பேசுவதில்லை என்ற உடன் பாட்டுக்கு வந்தவர்கள் பிரகடனத்துக்கு கெதிராகச் செயற்பட்டனர் இதை ஏற்றுக் கொள்ள மறுத்த வைகுந்தவாசன் தனிப்பட்ட முறையில் மிகவும் இழிவுபடுத்தப்பட்டார் தைப்பொங்கலன்று தமிழ்மக்கள் என்ன நடக்கபபோகிறது என்று ஆவலோடு எதிர்ப்பார்த்திருந்தார்கள் தமிழீழப்பகுதி எங்கணும் படைத்துறை முகாம்கள் போடப்பட்டன படைத்துறை முகாம்களில் இருந்த சிப்பாய்களே தமிழ்மக்கள் மேல் காடைத்தனத்தைக் கட்டவிழ்த்துவிட்டனர் இந்த நேரத்தில்தான் ஆனைக்கோட்டைக்காவல் நிலையம் தாக்கபபட்டது எண்பது காவலர்கள் தமது நிலையங்களைவிட்டு அஞ்சி அலறியடித்துக்கொண்டு ஓட வைத்ததைப்போல் பட்டாளத்தையும் நடுங்கவைக்கத் திட்டம் தீட்டினான் சுந்தரம் ஆனால் த. வி. கூட்டணியின் பிற்போக்குத் தலைமைப் பீடத்தின் அறிவுரையுடன் திட்டம் தீட்டினர் உட்பகைவர்கள். சுடப்பட்டான் சுந்தரம் தடைப்பட்டது மக்கள் எழுச்சி.

சுந்தரத்தினுடைய கொலையையும், இன்னும் பலருடைய கொலையையும் நயன்மைப்படுத்தி புலிகளின் தனிமனித பயங்கரவாதிக் குழு துரோகத்திற்குப் பரிசு என ஒரு துண்டறிக்கையினை வெளியிட்டிருக்கிறார்கள். இந்த அறிக்கையைக் கண்டித்து யார் சுந்தரம் என்பதையும் அவர்

www.tamilarangam.net



முன்னெடுத்து சென்றபாதை எது என்பதையும், இத்துண்டறிக்கையில் வெளியிட்டுள்ளோம். த.வி. கூட்டணியின் பிற்போக்குத் தலைமை அரசியல், வேலைசெய்யாமல் தனிமனித பயங்கரவாத வேலையை தன்னலத்திற்காக எப்போதும் ஊக்குவித்தே வந்திருக்கிறது. இதனமூலம் அரசு தங்களை மதித்து நெருக்கடிக்களைக் தணிக்க பேச்சுவார்த்தைக்கு அழைக்கும் எனக்கருதினர், அதில் வெற்றியும் கண்டனர். பேச்சுவார்த்தையின மூலம தன்னலத்தையும், முதலாளிவர்க்க ஆட்சியையும் பேணிக் காத்தனர், நசுக்கப்படும் மக்களின் வேணவா காற்றில் பறக்கவிடப்பட்டது 1977 தேர்தலில் தமிழ் மக்கள் மன்றத்தில் வைத்த அரசியல் அறிக்கை சிதைக்கப்பட்டது. தமது நாடாளுமன்ற நாற்காலி களின் வெற்றிக்கு உறுதுணையாக தனிமனித பயங்கரவாதத்தை ஊக்குவித்து வந்திருக்கிறார்கள். எதிர்காலத்திலும் இதையே செய்வர். தமிழீழ விடுதலைக்காக மக்களிடையே அரசியல் வேலைசெய்தவர் கள்தான் த. வி. கூட்டணியினரால் எதிரிகளாகக் கருதப்பட்டனர். அவர்கள் யாராக இருந்தாலும் விட்டுவைக்கமாட்டார்கள். அதற்குத் தனிமனித பயங்கரவாதிகளின் துணையையும், நாடுவர் தனிமனித பயங்கரவாதக்குழுவும் அவர் தம் தனிமனித பயங்கரவாத நடவடிக்கையும் எவ்வளவு கேடானது என்பதை அனைத்துத் தமிழர்களும் ஆய்ந்து பார்க்கவேண்டியே இவ்வறிக்கையை வெளியிடு கின்றோம். இவ்வறிக்கையைத் தனிமனித பயங்கரவாத குழுவினரும் படிக்கவேண்டுமென்று விரும்பு கிறோம். இது எல்லோருக்கும் புரியாவிட்டாலும் மத்திய குழுவாவது திருமபத்திரும்ப படிக்கவேண்டும் என்று விரும்புகிறோம் இவ்வறிக்கையைத் திறனாய்வு செய்து அறிக்கை விடுவார்களாயின் நாம் வரவேற்கின்றோம். மாறாக இதனைப்புறக்கணித்து கருவிகளைத் தூக்கினால் நாம் அஞ்சப்போவதில்லை, நாமும் கருவிப் போராட்டத்திற்கு அணியமானவர்களே !

எந்தவிடுதலை இயக்கங்களும் குழுக்களும் ஒரு தாக்கத்தை நிகழ்த்தும்போது அது வரலாற்றுப் போக்கிலே எத்தகைய மாற்றங்களை முன்னெடுக்கிறது என்பதனையும், அத்தாக்கஙகளினால் ஏற்படும் விளைவுகளையும், அவ்விளைவுகளினால் ஏற்படும் எதிர்த்தாக்கங்களை ஆய்வு செய்யவேண்டும்.

சுந்தரம் அச்சகத்திலே வைத்துக் கொலை செய்யப்பட்டதினால், ஏற்பட்ட தாக்கங்களையும் எதிர்த் தாக்கங்களையும் பின்வரும் தலைப்புக்களின் கீழ் ஆய்வு செய்தோம்,

(1) அரசியல் முன்னெடுப்புக்களை முறியடித்து தனிமனித பயங்கர வாதத்தை நிலைநாட்ட முயற்சித்தார்கள்.

(2) புதிய பாதை செய்தியிதழைத் தடைசெய்தார்கள்.

(3) தமிழன்குரல் செய்தித்தாளையும் இடைநிறுத்தினார்கள்.

(4) அச்சகங்கள் அரசியல்வேலை செய்வதனைத் தடைசெய்தார்கள்.

(5) சமூக உடமைச் சிந்தனை வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையிட்டனர்.

(6) மக்கள் எழுச்சியைத் தடைசெய்தார்கள்.

(7) தேர்தல் விடுதலை வாதிகளுக்கு உதவினார்கள்.

சுந்தரம் யார் என்பதையும், அவர் ஆற்றிய செயல் என்ன என்பதனையும் குறிப்பிட்டுள்ளோம். அதனுடைய தாக்கங்களையும் எதிர்த் தாக்கங்களையும் ஆய்ந்துள்ளோம்.

துரோகத்துக்குப் பரிசு கொலை என நயன்மைப்படுத்தினார்கள் தனிமனித பயங்கரவாதிகள். அப்படியென்றால் துரோகம் செய்தவர் யார்? பரிசுக்குரியவர் யார்? மக்களே தீர்மானியுங்கள் இதுதான் நாளைய வரலாறு! தொடர்ந்து படியுங்கள், முன்னேறுங்கள் !!

**"எதிர்கட்சித்தலைவர் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒரு நாடகமே" எனும் திறனாய்வு அடுத்து வெளிவரும்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்